# டிரான்ஸ்பிரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா
## தேசிய நேர்மைக்கான விருது – 2009
## டபிளியூ.எம்.சந்தன ஜயதிஸ்ஸ அவர்கள்

திரு. டபிளியூ.எம்.சந்தன ஜயதிஸ்ஸ அரசுக்கு சொந்தமான மில்கோ (பிரைவேட்) லிமிடட் நிறுவனத்தின் முதன்மை மனிதவள அபிவிருத்தி முகாமையாளராவார்.

அவர் இந்த நிறுவனத்தின் மாதம் ஒன்றுக்கு 80 மில்லியன் அளவிலான இலாபத்தை பெறும் நிலைக்கு கொண்டுவருவதற்காக அபரிதமான துணிச்சலுடன் நடவடிக்கை மேற்கொண்ட, மில்கோ ஊழலுக்கு எதிராக துணிச்சலுடன் நின்று ஊழலுக்கு எதிராக போராடிய முன்மாதிரியான அரசு ஊழியவராவர்.

கண்டி மெனிக்ஹின்னயை பிறப்பிடமாக கொண்ட இவர், மெனிக்ஹின்ன மகா வித்தியாலயம் மற்றும் வலல மத்திய மகா வித்தியாலயங்களில் கல்வி கற்று வாழ்க்கையில் பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் இலவச கல்வியை பற்றிப்பிடித்து பேராதனையில் பல்கலைக்கழத்தில் பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் எல்.எல்.பி. பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர் க.பொ.த (உயர் தரம்) கற்றுக்கொண்டு இருந்த போது தந்தை சுகயீனமுற்ற காரணத்தால் தொழிலற்ற தமது தாயுடன் இளைய சகோதர சகோதரிகளின் கல்விப்பொறுப்பையும் பாதுகாப்பையும் சுமக்கவேண்டி நேரிட்டது. அவர் க.பொ.த (உயர் தரம்) கற்கும் போது இரவில் காவலாளியாகவும் பகலில் உணர்வுபூர்வமிக்க மாணவராகவும் இருந்தார்.

'தந்தை சுகயீனமுற்றதுடன் எனக்கு தொழில்செய்யாமல் இருக்க முடியவில்லை அக்காலத்தில் விக்டோரியா அணைக்கட்டை நிர்மாணித்த திகன விலேஜில் காவற்காரராக வேலைசெய்து அதிகாலையில் நடந்தே வீடு வந்து பாடசாலை சென்றேன். விடுமுறை நாட்களில் மேலதிகமாக வருமானத்தைபெற கூலி வேலைக்கு சென்றேன். இவ்வளவு கஷ்டங்களுடன் எனக்கு கல்வி கற்பதில் மிகுந்த ஆசை இருந்தது. பாடசாலைக்கு அணிந்து செல்ல எனக்கு உடைகள் இருக்கவில்லை எனக்கென்று ஒரு சோடி காலணிகள் இருக்கவில்லை. பெரும்பாலும் தம்பியும் நானும் ஒரே உடையை அணிந்தோம் இருந்தும் இரவில் காவல் வேலைசெய்யும் போது புத்தகங்களை வாசித்து விடயங்களை சேகரித்து பாடசாலை விவாதக் குழுவில் இணைந்து விவாதித்தேன். வெளி பாடசாலைகளில் விவாதத்திற்கு செல்லும் நாட்களில் எனது நண்பர் ஒருவரின் வெள்ளை காற்சட்டையை இரவலாக பெற்று அணிந்து செல்வேன்.

வறுமையில் வாடியதால் நான் திரை மறைவு வாழ்க்கையை மேற்கொண்டேன் இருந்தும் கண்டி சில்வெஸ்டர், தர்மராஜா போன்ற பிரதான பாடசாலைகளுடனான விவாதத்தில் நாங்கள் வெற்றிபெறுவோம். பேச்சுப் போட்டிகளில் எப்போதும் நான் முதலாவதாக வருவேன். அதன் பின்னரும் சிறந்த அறிவிப்பாளர் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் அகில இலங்கை போட்டியில் மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டேன். 1984 இல் இந்த போட்டியில் கலந்துகொள்வதற்காக எனது வாழ்க்கையில் முதன் முறையாக கொழும்பு வந்தேன்'.

தனது துன்பகரமான பாடசாலை வாழ்க்கையில் சுகமான அனுபவங்களை ஞாபகப்படுத்தி திரு. ஜயதிஸ்ஸ இவ்வாறு தெரிவிக்கின்றார்.

நான் இருந்த வறுமையான பின்னணியுடன் எப்படியாவது உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. வேலைதளம் ஒன்றில் வேலைசெய்யும் போது கூட நான் அங்கு ஒருவர் மட்டுமே வகிக்கும் பிரதான பதவியையே பார்த்தேன். எமது வேலைத்தளத்தின் பொறியியலாளர்கள் பலர் இருந்தனர். இருந்தும் மனித வள முகாமையாளராக ஒருவரே இருந்தார். எனது இலக்காக இருந்தது சிறந்த 'பேர்சனல் மெனேஜர்' ஆகவேண்டும் என்பதே.

இவர் 2004 ம் ஆண்டு மில்கோ நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தி முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டது தொழிலாளர் பதவியிலிருந்து குழு முகாமையாளர் பதவி வரை பல்வேறு நிறுவனங்களில் கடமையாற்றி பெற்ற அனுபவங்களுடனேயேயாகும்.

சிறிதாக தெரியும் சிறு அளவிலான மோசடிகள் மூலம் அடையும் நஷ்டம் பெரிய அளவில் இடம் பெறும் மோசடிகள் மூலம் இடம்பெறும் பாதிப்பை விட அதிகமென்பதை அனுபவத்தின் மூலம் புரிந்துகொண்ட இவர் அந்த பிரச்சனைகளை இனங்கண்டு மாற்றங்கள் மூலம் ஊழலை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

5 ரூபாவை உழைக்க அனுபவிக்கும் சிரமத்தை அனுபவம் மூலம் தெரிந்து கொண்ட இவர் ஒவ்வொரு சிறு ஊழல்கள் தொடர்பாகவும் மிகுந்த கவனத்தை செலுத்தினார்.

இதற்கிடையில் முகாமைத்துவத்தின் உயர்மட்டத்தை மூடும் அளவிற்கு பரந்திருந்த பல்வேறு மோசடிகளை தடுப்பதற்காக இவர் முழுப்பலத்தையும் பிரயோகித்து போராடினார்.

ஐ.தே.க, ஜே.வி.பி மற்றும் ஐக்கிய முன்னணி தொழிற்சங்க கூட்டமைப்பு மில்கோவை பாதுகாக்கும் கூட்டிணைந்த முன்னணியின் ஸ்தாபகராகவும் ஜயதிஸ்ஸ விளங்கினார். இதற்கிடையில் உயர்பதவி வகிப்பவர் முதல் தொழிலாளர் வரையிலான பெரும்பாலானோரின் ஆதரவை பெற்றுக்கொண்டு மேலும் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க 300 மில்லியன் ரூபாவுக்கான நிதியம் ஒன்றை ஆரம்பிப்பதிலும் இவர் வெற்றிக்கண்டார்.

மில்கோவை பாதுகாக்கும் கூட்டு முன்னணியின் ஆதரவுடன் மோசடிக்கு எதிராக உடனடியாக செயற்படும் அவர் மில்கோ முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கோடிக்கணக்கான ரூபா நிதி மோசடி மற்றும் அழுத்தங்கள் மூலம் பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் ஊதிய உயர்வு வழங்குதல், தகுதி இல்லாமல் பதவி வழங்குதல், அரசியல் திட்டங்களுக்காக மில்கோ நிறுவனத்தின் இலட்சக்கணக்கான பெறுமதியுடைய வளங்களை அழித்தல் மற்றும் அரசு சொத்துக்களை முறைகேடாக பாவித்தல் போன்ற மோசடிகளுக்கு பல்வேறு தோற்றங்களை இனங்கண்டு தமது சக்திக்குட்பட்ட வகையில் தீர்வைத் தேட அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார். இதன் மூலம் தமக்கு அறிமுகமான அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், ஜனாதிபதி புலனாய்வு பிரிவு அதிகாரிகள், விடய நிபுணர்கள் போன்ற பல்வேறு நபர்களை இந்த ஊழல் எதிர்ப்பு போராட்டத்தில் பங்காளர்களாக்குவதில் வெற்றிகண்டுள்ளார்.

ஒருமுறை 13 கோடி ரூபாய்க்கு அதிகமாக மில்கோ நிதி மோசடி மற்றும் முறையற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பாக உள்ளக கணக்காய்வு அறிக்கையொன்றை ஜனாதிபதியின் கையிலேயே ஒப்படைத்து இந்த ஊழல்கள் தொடர்பாக ஜனாதிபதி புலனாய்வுப்பிரிவு மூலம் முழு விசாரணையொன்றை மேற்கொள்ளச் செய்துள்ளார். இந்த விசாரணையின் பயனாக பல முறையற்ற கொடுப்பனவுகளை தடுத்து நிறுத்தவும் முக்கியத்தவர்கள் பலரை பதவி இழக்கச் செய்யவும் அவருக்கு முடியுமாக இருந்தது.

திரு. ஜயதிஸ்ஸவின் இந்த ஊழல் எதிர்ப்புச் செயற்பாட்டை பொறுக்கமுடியாத மோசடிக்காரர்கள் அவருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தும் கடமை ரீதியாக அவருக்கு பலவித தொல்லைகளை கொடுத்தும் இறுதியில் பணிப்பாளர் சபையின் தீர்வின் படி அவரை பதவியிலிருந்து கீழிரக்குவதாக தெரிவித்து முகாமைத்துவம் அவரது பதவியை பறித்தது. இவை அணைத்து சவால்களையும் எதிர்த்து இவர் சட்டத்தின் முன்னால் சென்றார்.

உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மோசடி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கும் போது மிக மோசமானவிதத்தில் ரயில் விபத்தொன்றில் சிக்கிய இவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

மோசடி காரணமாக நாடு இழக்கவிருந்த கோடிக்கணக்கான ரூபாய்களை மீட்டுக்கொடுத்து மில்கோ நிறுவனத்திலிருந்து ஊழல் மோசடியை ஒழித்துக்கட்டும் நோக்குடன் முன்னோடி நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தன ஜயதிஸ்ஸ அவர்கள் இப்போது நிலையான வருமானம் இல்லாமல் கஷ்டஜீவனம் நடத்தும் போதும் ஊழல் மோசடிக்கு எதிரான போராட்டத்தை அவர் இன்னும் கைவிடவில்லை.